ச அரங்கில் மனித உரி
் ராணுவ பூட்சுகளால்
பட்டு போராளிகளும்சிவி
ும் வதைபடும் பூமியாக
ிவிட்டது. பாசிச ராஜீவ்
றாயிரம் துருப்புகளைக்
ுபோய் நிறுத்தி கொலை
ட்டத்தை நடத்திவரும்
ஈழம் உருக்குலைந்து

லரசுகளின் ஆசியோடு
ியாவில் கொம்பு சீவி
ட பேட்டை ரௌடியாக
றியாட்டம் போடுகிறது
ராஜீவ் கும்பல். அமைதிக்
ழத் தமிழரின் நலனுக்கா
று பசப்பிய அதன் ஈழ
் கழிப்பறைக் காகிதமாகி

கைகள், சமரச நாடகம்,
குழுக்களின் காட்டிக்
ும் நடவடிக்கை
அனைத்தையும் மீறி
தமிழர்கள் இந்திய
ஆக்கிரமிப்பிற்கெதிராக
கப் போராடி வருகி
அவர்களின் போராட்ட
வ எள்முனையளவும்மழுங்
ுடியவில்லை.

ல்வியாலும் அவமானத்
முகத்தில் கரி பூசிக்
டு சர்வதேச அரங்கில்
அம்பலப்பட்டு தனிமைப்
ருகிறது பாசிச ராஜீவ் கும்

ன்புள்ள ஆசிரியருக்கு,
த் தமிழர்கள் மீதான இந்
ராணுவத்தின் சமீபத்திய
் வெறியாட்டத்தைக் கண்
டென்மார்க்கிலுள்ள இந்
ூதரகத்தின் எதிரே நாங்
ின் 2ம் நாளன்று ஆர்ப்பாட்
்றை நடத்தினோம். ஆர்ப்
்தில் பெண்கள் குழந்தை
ள்ளிட்டு 700க்கும் மேற்
தமிழர்கள் பங்கேற்றனர்.
ாட்டத்தின் இறுதியில் எங்
ய்நாட்டின் மீது ராஜீவ் அர
்தின் மிருகத்தனமான நட
கைகளை எதிர்த்து இந்தியத்
ம் மனு ஒன்றைக் கொடுத்
ஆனால் ராஜீவின் விசு
தூதர் மனுவை ஏற்க
விட்டார். இந்திய அரசின்
ய நிலையை அவர் இதன்
ிருபித்துக் காட்டியுள்ளார்.
ு தவிர ஐரோப்பாவிலுள்ள
ான கட்சிகளும் அமைப்பு
ஏன், டென்மார்க்கிலுள்ள
் குழந்தைகள்கூட ஈழத்
மீதான இந்திய ராணுவத்
தலை நிறுத்தக் கோரி கடி
ழுதியுள்ளதை இதனை உங்
வனத்திற்கு கொண்டு வர
ுகிறோம்.
டென்மார்க்கிலுள்ள தமிழர்
ுரி மன்றம் அனைத்து பத்தி
ஆசிரியர்களுக்கும்
88 தேதியிட்டு எழுதிய கடி
ிருந்து)

# அமைதிப் படையின் அக்கிரமங்கள்

**சிவிலியன்கள் மீது துப்பாக்கிச் சூடு — குண்டுவீச்சு — சூறையாடல்கள்**

மார்ச் 11 அன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முத்தையன் காடு கிராமத்தை இந்தியஅமைதிப் படை. சுற்றி வளைத்து சூறையாடியது. 15க்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாக்கப் பட்டன. பல வீடுகள் இடித்து நொறுக்கப்பட்டன இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தால் ஏழு சிவிலியன்கள் வெட்டிக் கொல்லப் பட்டனர். பலர்படுகாயமுற்றனர்.

மார்ச் 13 அன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காளிகாடு கிராமத்தின் மீது இந்திய விமானம் படை தொடர்ச்சியாக குண்டு வீசித் தாக்கியது. பயிர்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஏப்ரல் 20 அன்று தொண்டமனாறு கோயிலருகே இந்திய அமைதிப்படை கண்மூடித்தனமாக சிவிலியன்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது. ஆறு சிவிலியன்களும் இரு குழந்களும் மாண்டனர். இதுபோலவே பெட்ரோ முனை பேருந்து நிலையத்திலும், ஒடிசடன்ராணுவ முகாம் அருகேயும் கண்முடித்தனமான துப்பாக்கிச் சூடுகளினால் பல சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.

மே மாதத் துவக்கத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள தங்கவேலாயுதபுரம், பனிச்சம்கேணி ஆகிய கிராமங்கள் மீது இந்திய விமானம் குண்டு வீசித் தாக்கியது. நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து நொறுங்கின. மே 13 14 தேதிகளில் வல்வெட்டித் துறையின் கடற்கரையை ஒட்டிய கிராமங்கள் மீது இந்திய கப்பற் படை இரவு நேரத்தில் குண்டு வீசித் தாக்கியது. ஆர்மிக்காரர்கள் ஊரை விட்டு ஓடும்படி சிவிலியன்களை விரட்டினர். இப்பகுதியிலுள்ள வீடுகள் அனைத்தும் தரை மட்டமாக்கப்பட்டன. எத்தனை சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்ற தகவல்கள் கிடைக்கவில்லை. மே 20ம் நாளன்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அலம்பில், செம்மலை, குமுலமுனை, தண்ணீரூட்டு, ஆண்டன்குளம் முதலான கிராமங்களை இந்திய ஹெலிகாப்டர் படை சுற்றி வளைத்து வான் வழியேயும் தரை வழியேயும் தொடர்ந்து 3 நாட்களுக்கு புலிகளைத் தேடுவது என்ற பெயரில் அப்பாவி சிவிலியன்களைத் தாக்கியது. எத்தனை பேர் மாண்டனர் என்ற தகவல் இதுவரை கிடைக்கவில்லை.

(பிரான்ஸ் நாட்டின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கமிஷனுக்கு மே மாதத்தில் அளித்த அறிக்கையிலிருந்து)

*அமைதிப் படையின் குண்டு வீச்சுக்கு இலக்கான 14 வயது சிறுமி; யாழ் மருத்துவ மனையில் உயிருக்குப் போராடுகிறார்.*



### கைது—சித்திரவதை—படுகொலைகள்

யாழ்ப்பாணத்தில் கொக்குவில்லைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியரான கந்தையா சுப்பிரமணியம் அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். அவரது ஆசனவாயில் மிளகாய்ப் பொடியைத் தூவியும், மரக்கட்டையை செருகியும் இடைவிடாமல் தொடர்ந்து அடித்தும் சித்திரவதை செய்தனர். யாழ் மருத்துவமனையில் இன்று அவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தார் என்பதுதான் அவர் செய்த குற்றம்.

யாழ்ப்பாணத்தின் செயிண்ட் ஜான் கல்லூரி ஆசிரியர்களான அல்போன்சிஸ் மற்றும் கமலநாதன் ஆகிய ஆசிரியர்கள் கடந்த மே 17 அன்று அமைதிப்படையால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை ராணுவ முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டனர். கமலநாதன் பின்னர் யாழ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். ஆனால் அல்போன்சிஸ் என்ன ஆனார் என்று இதுவரை தெரியவில்லை. விடுதலைப் புலிகளை ஆதரித்தாலேயே இவர்களுக்கு இந்த தண்டனை! இந்த அயோக்கியத்தனத்தை எதிர்த்து யாழ் நகரில் மாணவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் புறக்கணித்து கடையடைப்பு போராட்டத்தை நடத்தினர். சிங்கள எம்.பி.க்கள் கூட சிறீலங்கா பாராளுமன்றத்தில் இதுபற்றி கேள்விஎழுப்பினர்.

ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வடகாச்சி, இரணைமடு, பரந்தன் முதலான கிராமங்கள் அமைதிப்படையால் சுற்றி வளைக்கப்பட்டு சிவிலியன் அனைவரும் வரிசையாக நிறுத்தப்பட்டனர். இதில் இன்னின்னார் புலிகளின் ஆதரவாளர்கள் — புகலிடம் கொடுப்பவர்கள் என்று முக்காடு அணிந்த துரோகக் குழுக்... காட்டிக் கொடுத்ததும் அமை... படையினர் அந்த அப்பாவி ச... லியன்களை இழுத்துப் போ... மிருகத்தனமாக சித்திரவ... செய்தனர். இதுபோலவே ... வெட்டித்துறை, பொலிகந்... உடுப்பிடி பகுதிகளிலும் நடந்... ளது.

ஏப்ரல் 14 அன்று தாழம்... கிராமத்தில் புலிகளின் ஆ... வாளர்களான பாஸ்டின், ... ஆகியோர் அமைதிப்படை... கைது செய்யப்பட்டு அமை... படையினரால் இழுத்துச் செல்... பட்டனர். அவர்கள் இந்... ராணுவ முகாமில் கொடூரமாக ச... திரவதை செய்யப்பட்டு ந... பிணமாக விடுதலை செய்... பட்டனர். பின்னர் அதே ராணு... முகாமிலிருந்து துரோகக் கு... களின் கைக்கூலிகள் அவர்களை... பின் தொடர்ந்து வந்து தாக்... கொன்றனர். இது போல... பொறைதீவு, செட்டிபாளை... கலுதவெளி கிராமங்களில் கை... செய்யப்பட்ட புலிகளின் ஆத... ளார்கள் துரோகக் குழுக்கா... கொன்றொழிக்கப்பட்டுள்ளன...

## அமைதிப்படையின் அக்கிரமங்கள்

**சி**றீலங்காவில் தமிழ் சிவிலியன்களுக்கெதிராக பாரதூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவப் படைகள் ஈடுபட்டுள்ளது உண்மைதானா?

போராளிகளுக்கும் இந்தியப் படையினருக்குமிடையே உக்கிரமான போர் நடக்கும் பகுதிகளுக்குச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், வெளிநாட்டுப் பத்திரிக்கை நிருபர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது உண்மைதானா?

ஆம் எனில், இதற்கான காரணங்கள் என்ன? போரில் படுகாயமுற்றவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ மறுப்பது ஏன்?

இந்திய ராணுவத்தின் மனித உரிமை மீறல் பற்றிய செய்திகள் உண்மையானால், இந்திய மற்றும் சிறீலங்கா அரசுகளுடன்தொடர்பு கொண்டு மனித உரிமை மீறலுக்கு எதிரான நமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்.

அதே சமயம் சிறீலங்கா அரசிடம், போராளியோ, ராணுவத்தினரோ யாராக இருந்... பாதிக்கப்பட்டவர்களுக்கு ம... துவ உதவி செய்யசெஞ்சிலுவை... சங்கத்திற்கு உள்ள உரிமை... விளக்கி எவ்வகையிலும் சர்வ... செஞ்சிலுவைச் சங்கத்தைத் த... பது முறையல்ல என்று கே... வேண்டும்.

(இலங்கையில் இந்திய அ... திப் படையின் மனித உரிமை... பற்றி நெதர்லாந்து பாராளு... றத்தில் 10.12.87 அன்று உறு... னர் ஹென்க் நோல் எழுப்... கேள்விகள்.)

பல். மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் பாசிச காட்டுமிராண்டி என்ற பகிரங்கமான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இங்கே சில சாட்சியங்களைத் தொகுத்தளிக்கிறோம்.

உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் அவமானப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள பாசிச ராஜீவ் கும்பல் அவசர அவசரமாக ஈழ ஒப்பந்தத்தைஅமுலாக்கு அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டி விட்டதாக காட்டிக் கொள்ளத் துடிக்கிறது. இதற்காக ஒருபுறம் புலிகள்இயக்கத்தை எப்படியாவது நிர்ப்பந்தித்து சிறு சிறு அம்சங்களில் விட்டுக் கொடுத்து ஒப்பந்தத்தை ஏற்கச் செய்து, வடக்கு கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்திவிட முயற்சிக்கிறது. மறுபுறம் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் புலிகளைப் பூண்டோடு ஒழித்துவிட்டு துரோகக் குழுக்களின் துணையுடன் தனது நோக்கங்களை சாதித்துக் கொள்ளத் துடிக்கிறது.

துரோகக் குழுக்கள் தங்களை அரசியல் கட்சியாக அங்கீகரிக்கவும், இப்போதே கூட்டணிக்காகவும் நாயாய் அலைகின்றன. இத்தனை நாளும் தனிமைப்பட்டு முடங்கிக் கிடந்த அமிர்தலிங்கம் கொழும்புக்குப் பறக்கிறார். அவர் கொழும்பில் கட்சி அலுவலகம் தொடங்கி 'அரசியல்' நடத்த ராஜீவ் கும்பல் ஏற்பாடுசெய்துள்ள

**தாகத் தகவல்கள் வருகின்...**
**புலிகள் பங்கேற்கா விட்டா...**
வடக்கு—கிழக்கு மாகா... தேர்தலை நடத்திவிடத் து... கிறது பாசிச ராஜீவ் கும்பல். ... ஈழத்தமிழருக்கு ஒரு இ... சிப்பாய் என்ற விகிதத்தில் ரா... வத்தைக் குவித்து அதன் க... காணிப்பின்கீழ் நடத்தப்ப... இந்தத் தேர்தல் முற்... ஜனநாயக விரோதமான... அநீதியானது; துரோகத்... மானது.

மறுபுறம் புலிகள், இந்... உளவுத்துறை அமைப்பான ... வுடன் ரகசிய பேரங்கள்... பேச்சு வார்த்தைகளில் ஈடுப... வருகின்றனர். புலிகளின் பு... வாழ்வுக்காக நிதி, ...



கற்பழிப்புகள்

மார்ச் மாதத்தில் மட்டும்
ி கிராமத்தில் 7 பேரும், வாக
பெண் மணியும் இந்திய அமை
ால் கற்பழிக்கப்பட்டனர்.
ரு அன்னையர்கள் உள்ளிட்ட 6
இரணைமடு—விஸ்வமடு ஆகிய
ல் அமைதிப்படையினரால்
ப்பட்டனர். இதை எதிர்த்து கிளி
முற்றாக கடையடைப்புநடத்தப்
குடிமக்கள் கமிட்டி அமைதிப்
திகாரிகளிடம் முறையிட்டும்கூட
எந்த நடவடிக்கையும் இல்லை.
வலமான நடவடிக்கைகளுக்கு
வத்தாற்போல் முல்லைத்தீவு
தில் குமுலமுனை கிராமத்தில்
சிறுமிகள் அமைதிப்படையால்
ப்பட்டனர்.



இந்திய அமைதிப்படை போராளிகள் தலைமறைவாகியுள்ள சிவிலியன் குடியிருப்புப் பகுதிகளின்மீது குறிப்பாக இரவு நேரங்களில் கண்மூடித்தனமாக வான் வழியேயும், தரை வழியேயும் குண்டு வீச்சு நடத்தியுள்ளது. சிவிலியன்கள் தஞ்சமடைந்துள்ள கோயில்கள், பள்ளிகள்மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது.

உயிர் பிழைக்க சிவிலியன்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குத் தப்பியோடுகின்றனர். ஆனால் அமைதிப் படையின் ஹெலிக்காப்டர்கள் பகலிலோ இரவிலோ ஏதேனும் ஒரு வாகனம் நகர்ந்தால்கூட குண்டு வீசும்போது அவர்களால் எப்படி தப்பியோடி உயிர் பிழைக்க முடியும்? எனவே அவர்கள் பிரதானசாலை வழியே செல்வதைக் கைவிட்டு காடுகள் வழியே ஏறத்தாழ 20 முதல் 40 நாட்கள் வரை நடந்து போய் வவுனியாவைச் சென்றடைந்தார்கள்.

இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு சிவிலியன்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காதபடி தடுத்தனர். யாழ் மருத்துவமனையைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவர மருத்துவர்களையும் தாதியர்களையும் கோரமான முறையில் கொன்றொழித்தனர். பொதுக் கட்டிடங்களை இடிப்பது குடியிருப்புகளைத் தாக்கி அழிப்பது, சூறையாடுவது, கற்பழிப்பது முதலான கேவலமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மூன்று நட்சத்திரஅணி எனப்படும் போராளிக் குழுக்கள் அமைதிப் படையின் கைக்கூலிகளாக மாறி புலிகள் இயக்கத்தினரைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக மாறிவிட்டனர். புலிகள் இயக்க ஆதரவாளர்கள் கைது செய்யப்படுவதும் பின்னர் அவர்கள் காணாமல் போவதும் தொடர்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தினரும், பத்திரிக்கையாளர்களும் போர் நடக்கும் பகுதிகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றனர்.

ஈழத்தில் மனித உரிமை மீறல் மற்றும் சிவிலியன்களுக்குப் பாதுகாப்பாற்ற நிலையைக் கண்டுநாங்கள் மிகவும் கவலையடைகிறோம். இந்திய—இலங்கை அரசுகள் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள கோருகிறோம்.

- 1947 ஜெனிவா தீர்மானத்தின்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை போர்ப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

- அரசு சார்பற்ற அமைப்புகள், சர்வதேச மனித உரிமைக் கழகத்தினர் மற்றும் பத்திரிக்கையாளர்கள் சுதந்திரமாக வடக்கு—கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லஅனுமதியளிக்க வேண்டும். அவர்கள் யுத்தக் கைதிகளைச்சந்திக்கவும் உரிமை தரப்பட வேண்டும்.

- உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து சர்வதேசப் பார்வையாளர்கள் முன்னிலையில் அமைதிப் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும்.

- யாரையும் எந்த நேரத்திலும் விசாரணையன்றி கைது செய்து சிறையிலடைக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

- அனைத்து தமிழ் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

(ஜெனிவாவில் 9.2.88 அன்று ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமைக் கமிஷனின் 44வதுகூட்டத் தொடரில்நிறைவேற்றப்பட்ட 'சிறீலங்காவில் தமிழர் பிரச்சினை' பற்றிய அறிக்கையிலிருந்து)

நிறுத்தம், புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பது, வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பு, கூடுதல் அதிகாரங்கள் என்ற முறையில் பேரங்கள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. ஆனால் அதற்கு முன்னரே புலிகளைப் பூண்டோடு ஒழிக்கும் நடவடிக்கையில் அமைதிப்படை ஈடுபட்டுவருகிறது. 200க்கும் மேற்பட்ட கொரில்லாக் குழுக்களைக் கொண்டிருந்த புலிகள் இயக்கம் இன்று சில பத்து குழுக்களாக சிறுத்து விட்டனர் என்று இந்திய அரசே கூறுகிறது.

புலிகளை அழித்தொழிப்பதன் மூலமோ அல்லது ரகசிய பேரங்கள் சதிகள் மூலமோ ஈழப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. அவை இந்திய—இலங்கை மக்களுக்குஎதிரானவை. மேலும், மக்களுக்குத் தெரியாமல், மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்காமல் திணிக்கப்படும் எந்தவொரு ரகசிய ஒப்பந்தத்துக்கும் ஈழ மக்கள் பொறுப்பேற்க முடியாது. ஈழ மக்கள் பெருமளவு உயிர்த்தியாகம் செய்ததும், ரத்தம் சிந்தியதும் தங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கேயன்றி, ஒரு சில குழுத் தலைவர்களின்குறுகிய சுயநலன்களுக்காக அல்ல. ஈழத் தமிழர்களின் தீரமிக்க உரிமைப் போரை விலைபேச முடியாது; அழித்து விடவும் முடியாது. சர்வதேச மக்கள் ஆதரவுடன் இதை மீண்டும் ஈழ மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள்.

இந்திய அமைதிப்படை புலிகள் மீது தொடுக்கும் யுத்தம் அநீதியானது. இந்திய ராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைகள் அட்டூழியங்களின் விளைவாக சிவிலியன்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகிறார்கள். இந்திய அமைதிப்படை இந்தியாவின் நல்லெண்ணத்தைச் சிதைத்து விட்டது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையையும் சர்வதேச மதிப்பையும் செல்வாக்கையும் சிதைத்துவிட்டது.

இந்திய ராணுவத்தின் அட்டூழியங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். போர் நிறுத்தும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். போர் நிறுத்தத்துக்கு முன் போராளிகள் ஆயுதங்களை சரணடையச் செய்யக் கோருவது நடைமுறையில் சாத்தியமானதல்ல. தமிழர்களின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் சேவை செய்ய விரும்பும் நான் உங்கள் மீது நம்பிக்கை வைத்து இவற்றைக் கோருகிறேன்.

(மனித உரிமைக்கான வழக்கறிஞர்கள் மற்றும் சர்வதேச உடல் ஊனமுற்ற மக்களின் ஐ.நா. சபை பிரதிநிதியும் தலைமை சட்டத் தலைவருமான காரென் பார்க்கர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்திலிருந்து).

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்குப்பிறகு தமிழ் மக்களுக்கு எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. சிறீலங்காவிலும் வெளிநாடுகளிலும் தமிழ் மக்கள் இன்னமும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிறைகளிலும் சித்திரவதை முகாம்களிலும் வதைபடுகிறார்கள். வெளிநாடுகளில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் தாய் நாடு திரும்ப வாய்ப்பேயில்லை ஏனெனில் அங்கே அவர்களுக்கு நிச்சயமாக அமைதிஇல்லை. 25 பேருக்கு ஒருசிப்பாய் என்ற விகிதத்தில்இந்தியராணுவம்பெருமளவில்ஈழத்தில் குவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கூட அது தமிழர்களுக்காக ஒரு மண்ணும் செய்யவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு உதவுவதாகக் கூறும் உங்கள் நோக்கத்தை டச்சு நாட்டு ஜனநாயகக் கட்சியாகிய நாங்கள் சந்தேகிக்கிறோம். அவதிப்படும் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைப் பார்த்துக் கொண்டு நாங்கள் சும்மாயிருக்க முடியாது. உங்கள் ராணுவத்தை ஈழத்திலிருந்து திரும்பப் பெறுமாறும், ஈழத் தமிழர் நலனுக்காக கொஞ்சமாவது நடவடிக்கை எடுக்குமாறும் இக்கடிதத்தின் மூலம் கோருகிறோம்.

(டச்சு நாட்டின் சமூக ஜனநாயகக் கட்சி இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு 25.3.88 தேதியிட்டு எழுதிய பகிரங்க கடிதத்திலிருந்து)

# மாஃபியா குண்டர்கள் -ஓட்டுப் பொறுக்கிகள் -போலீசுக்காரன்கள் கூட்டு


ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள், போலீஸ்காரன்கள், சமூக விரோதிகளின் கூட்டு எவ்வளவு அபாயகரமாக உருவாகிவிட்டது என்பதற்கு மேலும் இரண்டு சான்றுகள்: பெங்களூரில் நடந்த கேரள வக்கீல் ரஷீது கொலை மற்றும் சென்னை திருவான்மியூரில் நடந்த ஆட்டோ டிரைவர்கள் கொலைகள்.

இவ்விரு சம்பவங்களிலும் கோரமான முறையில் நடந்த கொலைகளும், அவற்றை மூடி மறைப்பதற்கு நடந்த முயற்சிகளும் பல அதிர்ச்சியூட்டும் செய்திகளைச் சொல்லுகின்றன. கேரள வக்கீல் ரஷீதை உயர் அதிகாரிகள் உட்பட போலீசாரே அடித்துக் கொன்றனர். விபச்சாரியாய் இருந்தார்கள். திருவான்மியூரில் ஐந்து பேரை விபச்சார விடுதி தரகர்கள் கொன்றனர் உயர் போலீஸ் அதிகாரிகள் அதற்கு உடந்தையாய் இருந்தார்கள். இவ்விரு சம்பவங்களோடும் ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தொழில் போட்டியின் காரணமாக கேரள வக்கீல் ரஷீது கொலையில் கர்நாடக போலீசு மந்திரி ஜாலப்பாவின் தொடர்பு வெளிவந்து விட்டது. ஆனால் திருவான்மியூர் கொலைகளில் தமிழக ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளின் தொடர்பு வெளிவரவில்லை.

கேரளா கொல்லத்தைச் சேர்ந்தவர் சதாசிவன். சுயநிதிக் கல்லூரிகள் வைத்துக் கொள்ளை யடிப்பதில் இவருக்கும் கர்நாடகா போலீசு மந்திரி ஜாலப்பாவுக்கு போட்டி. கர்நாடகா கோலார் தங்க வயல் நகரில் சுயநிதி மருத்துவக் கல்லூரி வைக்க சதாசிவனுக்கு முதலில் அனுமதி கிடைத்தது. பிறகு மந்திரி ஜாலப்பா தலைமையிலான ஒரு அறக்கட்டளைக்கு அனுமதியை மாற்றிவிட்டது "பரிசுத்தம்" ஹெக்டே மந்திரி சபை.

ஏற்கனவே சஞ்சய் காந்தி ஆசிரியர் கல்லூரி ஒன்றை சிலருடன் சேர்ந்து சதாசிவன் நடத்தி வந்தார். தொழில்போட்டி காரணமாக அவர்களைப் பிரித்து சிவதாசனை விரட்டும்படி ஏற்பாடு செய்தார் ஜாலப்பா. போலீஸ் ஆதரவுடன் சதாசிவனின் எதிரிகள் கல்லூரியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இருப்பினும் எதிரிகள் அந்தக் கல்லூரிக்குள் நுழைவதற்குத் தடை உத்தரவு பெற்றிருந்தார் சதாசிவன். ஆனால் அதை அமுலாக்கவோ கல்லூரிக்குள் நுழையவோ அவரால் முடியவில்லை.

இந்தச் சமயத்தில் தமது வழக்கறிஞருக்கு அந்தக் கல்லூரியின் இடம் கேட்டு சதாசிவனை அனுப்பினார் கேரள வக்கீல் ரஷீத் கோர்ட் உத்திரவை அமுலாக்குவதாகக் கூறி ரஷீத் கல்லூரிக்குப் போனார். எதிரிகள் போலீஸை ஏவி ரஷீத்தை அடித்து நொறுக்கி பல்லை உடைத்து ஆட்டோவுக்குள் தூக்கிப் போட்டு போலீ



கேரள வக்கீல் ரஷீத்

கர்நாடகா போலீசு மந்திரி ஜாலப்பா

